# JAFFNA CENTRAL COLLEGE

JAFFNA CENTRAL COLLEGE
BICENTENNIAL 1816-2016

Principal
Dr. S. K. ELILVENTHAN
BA(Hons), PGDEM, MEd, DEd, SLPS-1, SLEAS

Jaffna,
Sri Lanka.


2022.03.28

பழைய மாணவர் சங்கங்கள்,
ஏனைய சகல பழைய மாணவர்கள்,
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

**பாடசாலை மைதானத்தின் புனரமைப்பு தொடர்பானது.**

எமது பாடசாலை விளையாட்டு மைதானத்தில் புற்தரை (ரேவ்) அமைத்து துடுப்பாட்ட வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் நாம் முன்பு கேட்டுக்கொண்டதற்கமைய அண்மையில் லண்டன் பழைய மாணவர் சங்க செயலாளர் திரு.தி.செல்வகுமார் அவர்கள் இலங்கை வந்த போது இது தொடர்பான முன்னெடுப்புக்களை மேற்கொண்டார். தொடர்ந்தும் எமது பழைய மாணவர்கள், விளையாட்டுத்துறைத்தலைவர், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்களுடனும் கலந்துரையாடப்பட்டது. மைதானத்தின் குறித்த வடிவமைப்பு உதைப்பந்தாட்டம் உட்பட பாடசாலையின் ஏனைய விளையாட்டுக்களை பாதிக்காத வகையில் நிபுணர் குழுவொன்றின் சிபாரிசுடன் எமக்கு முன்வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2022.03.21 அன்று நடைபெற்ற பாடசாலை அபிவிருத்தி சங்க கலந்துரையாடலிலும் பேசுபொருளாகி ஒருமித்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக மைதானத்தை மட்டப்படுத்தல் மற்றும் வடிகாலமைப்பு வேலைத்திட்டங்களை பழைய மாணவர் பங்களிப்புடனும் புற்தரை (ரேவ்) அமைப்பதனை துடுப்பாட்ட சங்கத்தின் பங்களிப்புடனும் செய்வதாக திர்மானிக்கப்பட்டது. புற்தரை அமைப்பது தொடர்பாக ஏற்கனவே துடுப்பாட்ட சங்கத்தால் பார்வையிடப்பட்டு ஒப்புதலும் பெறப்பட்டு அதற்கமைய கோரிக்கைகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

எனவே பழைய மாணவர் ஆகிய தாங்கள் மைதான மட்டப்படுத்தல், வடிகாலமைப்பு, நீர்ப்பாசனம் என்பவற்றைப் பொறுப்பேற்று நிறைவேற்றித்தருவதுடன் அதற்குரிய பராமரிப்பு வசதிகளையும் ஏற்படுத்தி தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதிபர்

Dr.S.K.Elilventhan
PRINCIPAL
JAFFNA CENTRAL COLLEGE
JAFFNA.


Tel: 021 222 2184, 021 222 3658, 021 221 4617 Fax: 021 222 3658
E-mail: jcentraloffice@gmail.com
Web: www.jcc.lk


Scanned with CamScanner